# கிறிஸ்தவ கீர்த்தனைகளும்

# Rev. H. A. POPLI IYER அவர்களும்

கிறிஸ்தவ கீர்த்தனை பெருவிழா கொண்டாட்டம் 10 வது ஆண்டுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு வாழ்த்துக்கள்.

கிறிஸ்தவ பக்தி வைராக்கியத்தை இசையோடு வளர்க்கவும் இசை இருதயத்தை இளைக்கப்பண்ணி ஆண்டவரோடு இன்னும் கிட்டி சேரவும் கிறிஸ்தவ இசைக்கு பெரிதும் பாடுபட்ட அநேகர் உண்டு. அவர்களில் மிகவும் நினைவுகூற தக்கவர்களில் Rev. H.A. POPLI IYAR அவர்களும் ஒருவர். பெருவாரியான கிறிஸ்தவ மிஷனெரிமார்கள் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தங்களை ஏற்றுக்கொண்டு ஆதரவு அளித்த ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்ய இரண்டு இடங்களை தெரிவு செய்தார்கள். ஒன்று திருநெல்வேலி மற்றொன்று ஈரோடு. ஈரோடு பகுதியை தெரிவு செய்து நற்செய்தி பணிசெய்ய தங்களை அர்ப்பணித்த Rev. A.W. Brough Iyar மற்றும் Rev. H.A. POPLI IYAR அவர்களையும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்கள் இருதயக்கல்வெட்டில் செதுக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டில் பிறந்தவர் அந்நாட்டின் கலாச்சாரத்தோடு ஒன்றித்து வாழ்வது இயல்பு. ஆனால் மேல்நாட்டில் இருந்து முற்றிலும் மாறுபட்ட முற்றிலும் அறிமுகமில்லாத கலாச்சாரத்தினுள் நுழைந்து அதிலும் இசை நுணக்கங்கள் அதிகமுள்ள மனோதர்ம தென்னிந்திய கர்நாடக சங்கீதத்தை கற்றுத்தேர்ந்து அதில் மிகத்தேர்ந்து நற்செய்திக்கு அதனை பயன்படுத்திய மகான் Rev. H.A. POPLI IYAR ஆவர். அவர் வேட்டி கட்டி சம்மணம் போட்டு ஒரு குருவுக்கு முன் பவ்வியமாக அமர்ந்து இசைக்கல்வியை கற்றுக்கொண்டார். ஒரு கையில் வேதபுத்தகமும் மறுகையில் கிண்ணரத்தையும் தாங்கிக்கொண்டு ஏழை எளியோர், கல்வியறிவில்லாத பாமரர் வசிக்கும் குடிசை வீடுகளுக்குள் சென்று இசை மூலம் சுவிசேசம் சொல்லியும் அவர்கள் உண்ணும் உணவில் தானும் சிறிது பெற்று உண்டும் பணி செய்தார். அவர் தேறிய வயலின் வித்வான். அவருடைய துணைவியாரும் organ வாசிப்பதில் திறமை பெற்றிருந்தார்கள்.